# பி. வி. ஜானகிராமின்

## உலோகச் சிற்பங்கள்



இந்திரன்

இன்றைய கலை- வடிவங்களோடு அல்லாமல் வடிவங்களின் சாராம்சங்களோடு சம்பந்தப்பட்டதாக இருக்கிறது. இதனாலேயே அது தனது ருப அல்லது அருபத் தன்மைகளைப் பற்றி அதிக அக்கறை எடுத்துக் கொள்வது இல்லை. அதே நேரத்தில் அப்படைப்பு அந்தக் கலைஞனின் அசல் தன்மை கொண்ட பார்வையின் வெளிப்பாடாக இருக்கிறதா என்று அதிக அக்கறை எடுத்துக் கொள்கிறது.

உதாரணமாக இந்தியாவிலும், அயல்நாடுகளிலும் தனக்கென தனிப்பெயர் பெற்ற சிற்பியான பி. வி. ஜானகிராம் படைக்கும் அண்மைக்கால உலோக சிற்பங்களைஎடுத்துக் கொண்டால், அவை நாம் எளிதில் அடையாளம் காணும் ஆந்தை, கழுகு, இயேசு என்று உருவ ரீதியானவைகளாக இருந்த போதிலும், அவை இயல்பு நிலைகளின் எல்லைகளை மீறியவைகளாகவே உள்ளன. இதனாலேயே பி. வி. ஜானகிராமின் சிற்பங்களை, உருவங்களிலிருந்து மெதுவாக, அருபத்தை நோக்கி நகர்பவை என்று குறிப்பிடலாம். வேறுவிதமாகச் சொல்வதானால், எந்த ஒன்று அந்த சிற்பங்களைக் கலைத்தன்மை கொண்டதாகச் செய்கிறதோ அதை நோக்கி நகர்பவை என்றும் சொல்லலாம். இந்த இடத்தில், அருபத்தன்மை கொண்டதுதான் கலைத்தன்மை கொண்டது என்ற வீண் மயக்கத்திற்கு நாம் ஆளாகிவிடக் கூடாது.

செம்பு, இரும்பு ஆகிய உலோகத் தகடுகளையும், பல்வேறு கனபரிமாணங்கள் கொண்ட உலோகக் கம்பிகள், உலோக நாடாக்கள், ஆணிகள் ஆகியவற்றை தட்டியும், பற்றவைத்தும் படைக்கப்படும் உலோகச் சிற்பங்கள் அவருக்கென்ற தனி முத்திரையைக் கொண்டவை. அவரது தனி பாணியே அவரது கையெழுத்து.



பெரிய மீசை கொண்டவரான இந்தச் சிற்பி, தென்னாட்டுக் கோயில்களின் சிற்பத் தூண்கள், கோயில் கதவுகளின் மீது காணப்படும் உலோகப் படைப்புச் சிற்பங்கள், தெய்வ விக்கிரகங்களின் மீது சாத்தப்படும் உலோக கலசங்கள் ஆகியவற்றின் கலை நேர்த்தியில் தன்னைப் பறிகொடுத்தவர். இவற்றைச் செய்யப் பயன்படும் செய்நேர்த்தியைத் தனது சிற்பங்களைச் செய்யும் உத்தி முறையாக ஏற்றுக்கொண்டு அதனை மேலும் செழுமைப்படுத்தியவர்.

சுமார் 17 ஆண்டுக்காலமாக கலை பயிலும் மாணவராக இருந்து,ஓவியம்,சிற்பம், வணிக ஓவியக்கலை ஆகிய மூன்று பட்டங்களைப் பெற்றவரான இந்தச் சிற்பி, கடந்து வந்த நிலைகள் பற்பலவாகும்.

இவரது ஆரம்பகால டெம்பரா வண்ண ஓவியங்களுக்கும், இன்றைய அவரது சிற்பங்களுக்கும் தொடர்பில்லாத அளவுக்கு அவர் மாறியிருக்கிறார். 1947ல் இந்தியா விடுதலை அடைந்த பிறகு, வளர்ந்த உலகக்கலைகளுடன் தொடர்பு பெருகியதன் காரணமாக, ஜானகிராமும் கூட இத்தாலிய சிற்பியான மெரினோ மெரினியின் பாதிப்புக்கு ஆளாகிறார். இந்தக் கால கட்டத்தில் தான், மண்மணம் கொண்ட ஓவியங்களைச் செய்து வந்த ஜானகிராம், சிற்பங்களுக்குத் திரும்பினார். இந்தக்கட்டத்தில், சிமெண்ட்டினால் இவர்படைத்த இரு குதிரைகள் எனும் சிற்பம் அதிக பெயர் பெற்றது. குதிரைகளின் குதிரைச் சக்தியை இந்த சிற்பத்தில் காணலாம். இது யதார்த்த நிலைகளை ஒட்டி படைக்கப்பட்டது.

1964ல் இவர் உலோகத்தில் உருக்கி வார்த்த கிருஸ்து எனும் சிற்பம் இவரது பிற்கால இயேசுவின் சிற்பங்களுக்கு அடிக்கல்லை நாட்டியது. இதன் பிறகு 'கிருஸ்துவும், அன்னை மரியும்' எனும் சிற்பங்களைச் செய்யலானார். இந்தச் சிற்பங்கள், கிருத்துவ மதத்தின் கட்டளைகளுக்கு அல்லது நம்பிக்கைகளுக்கு உட்பட்டு செய்யப்படவில்லை என்ற போதிலும், கலையின் கட்டுத் திட்டங்களுக்கு உட்பட்டு செய்யப்பட்டவை. இந்த இயேசுநாதர் கம்பிகளை விலா எலும்புகளாகக் கொண்டும், முள்முடிகளைக் கொண்டும் தனிப்பட்ட இரக்க உருவமாக படைக்கப்பட்டிருக்கிறார். இந்தச் சிற்பங்களில் இயேசு நாதர் தேவகுமாரனாக அல்லாமல், மனிதகுமாரனாகப் படைக்கப்பட்டிருக்கிறார். கம்பிச் சுருள்களினால் தாடியும், இரும்புத் தகடுகளால் ஆந்தை போன்ற பறவைகளின் சிறகுகளையும் படைக்கும் இந்த உத்திமுறை ஜானகிராமிற்குமட்டும்உரியது.

டி.பி. ராய் சௌத்ரி, பணிக்கர் ஆகிய மிக உயர்ந்த கலை மேதைகளின் கீழ் பயின்ற ஜானகிராமின் படைப்புகளில் அவர் முன்னரே பயன்படுத்தப்பட்டு தூக்கி எறிந்த உலோகங்களைப் பயன்படுத்துவதில்லை. முன்னரே பயன்படுத்தப்பட்டவை, இவரது கற்பனை வளத்தை முடக்கிவிட நேரிடும் என்று கருதுவதே இதற்குக் காரணம். 'வீரன்' எனும் சிற்பத்தில், வீரனின் உடை மடிப்புகளைக் கூட கம்பிகளைக் கொண்டு மிக நேர்த்தியாக படைத்திருக்கிறார். இதுவே இவரது தனிபாணியாகும்.

இவரது அண்மைக்கால படைப்புகளில் சிங்காரிப்பதில் இருக்கும் ஆசை, அலங்காரப் படுத்துவதில் இருக்கும் தீவிரம் இந்திய மரபு சார்ந்தது ஆகும். இந்திய கலை வரலாற்றில் வங்காள ஓவிய மேதை ஜமினி ராய்க்குப் பிறகு, இயேசுநாதரை இந்தியமயப்படுத்திய முக்கிய மானவர்களில் ஜானகிராமின் இடம் மறுக்க முடியாதது.

உலோகச் சிற்பங்கள் ஜானகிராமின் தனிமுத்திரைகள் கொண்டவை. அவரது தனி பாணியே அவரது கையெழுத்து.

# வெளிகளை இசைமயம் ஆக்குகிறார் ஆதிமூலம்



சையின் தன்மையை
டயவே எல்லா கலைகளும்
ல்கின்றன என்று குறிப்பிடு
ண்டு. தமிழ் ஓவியரான
எம். ஆதிமூலம் தீட்டும்
யங்களின் பல்வேறு
ர்ச்சி நிலைகளைப்
க்கும்போது இது உண்மை
என்று நமக்குத்
ன்றும்.

மிழ் ஓவிய உலகில் கடந்த
ஆண்டுகளுக்கும் மேலாக
இயங்கி வரும் ஓவியர்
மூலம், இலக்கிய உலகுடன்
டர்பு கொண்டிருக்கும்
சில ஓவியர்களில் ஒருவர்.
லான வார இதழ்களில்கூட
து சித்திரங்கள் இடம்
றுவது என்பது மக்களோடு
வர் கொண்டிருக்கும்
டர்புக்குச் சான்று.

ன்று 52 வயதுக்காரரான
ர், சென்னை ஓவியக்
லூரியிலும், ராஜஸ்தானின்
ஸ்தாலி வித்யா பீடத்திலும்
யம் பயின்றபோது, இவரது
டப்புகள் உண்மை வடி
களைப் படம் பிடிக்கிற,
ல்கிற, புரிந்து கொள்கிற
ற்சிகளாக இருந்தன.
னால் முதிர முதிர அவருக்குள்
ந்த ஆதிமூலம் என்கிற
டைப்பு சக்தி மிக்க ஓவியன்,
ம்பத்திரும்ப ஒரே தன்மை
அமைகிற இயந்திரத்
மையிலான வடிவங்களில்
விரைவிலேயே சலிப்
டைந்துவிட நேர்ந்தது.
னால் அவருக்கே உரித்தான
வங்களையும், வண்ண
ழங்குகளையும் படைக்க
வர் ஓய்வின்றி முயன்றார்;
ற்றியும் கண்டார்.

அவரது ஓவிய, சித்திர வடி
ங்கள், உலகில் சாதாரணமாக
ணக்கிடைக்கும் வடிவங்களி
ருந்து மிக நுண்மையான
றையில் வேறுபட்டு, அந்த
வங்களின் உள்ளிருக்கும்
ளுமையின் தன்மை மேலே
சிந்து வருமாறு அமைந்து
டுகின்றன. இதனால்
திமூலம் அகில இந்திய
ளவில் ஓவிய உலகில் தனக்கென தனியானஒருஇடத்தினை ஏற்படுத்திக் கொண்டிருக்கிறார் என்று சொன்னால் அது உயர்வு நவிற்சி அல்ல.

அவரது அரசர் வரிசை, குதிரை வீரன் வரிசை, மண் ஜாடி வரிசை சித்திரங்களை எடுத்துக்கொண்டாலே போதும். குதிரை வீரன் வரிசையில் ஆதிமூலம் குதிரையையும், மனிதனையும் நாம் அன்றாடம் கண்ணால் காண்கிற முறையில் படைப்பதில்லை. அவை ஓவியருக்குள்ளிருக்கும் கற்பனையில் ஊறி, அதனை உறிஞ்சி, ஊதிப் பருத்து வெளியே வந்து குதித்த குதிரையும், மனிதனும் ஆகும். துணியில் தைத்து பஞ்சடைத்து துருத்திய பொம்மைகள் போலவும் அவை காணப்படுகின்றன. இதனை வரைய கீறல் போன்ற மெல்லிய கோடுகள், உடைந்த சிறுசிறு கோடுகள், அடர்த்தியாக விழுந்த கரிய மை அடைகள் ஆகியவற்றை பயன்படுத்துகிறார். வீரனின் மீசையோடு கூடிய முகம், குதிரையின் கடிவாளம் கவ்வியமுகம் ஆகியவற்றின் உணர்ச்சி வெளிப்பாட்டை ஆழமாக்குவதற்காக, அவற்றை இருள் திட்டுக்களால் போர்த்திவிடுகிறார். இதனால் அவற்றின் எண்ணவூட்டுச்சக்தி அதிகமாகி விடுகிறது.

> வீரனின் மீசையோடு கூடிய முகம், குதிரையின் கடிவாளம் கவ்விய முகம் ஆகியவற்றின் உணர்ச்சி வெளிப்பாட்டை ஆழமாக்குவதற்காக அவற்றை இருள் திட்டுக்களால் போர்த்தி விடுகிறார் ஆதிமூலம்.

அரசர்களும், குதிரை வீரர்களும் இருக்கும் இடம் தெரியாமல் போய்விட்ட இன்றைய ஜனநாயக உலகில் ஆதிமூலம், அரசர்களை வெறும் போலிகளாகவும், பொம்மைகளாகவும் படைப்பது சரிதானே ?

1969—ல் இவரது 'மகாத்மா காந்தி' என்ற பொருளில் வைக்கப்பட்ட ஓவியக் கண்காட்சி பற்றி ஜெயா அப்பாசகலி என்ற சிறந்த கலை விமர்சகர் குறிப்பிடுகிறார்: கண்காட்சியில் ஆதிமூலம் அடைந்த வெற்றி அதன் கருப்பொருளாக அமைந்த காந்தியினால் கிடைத்தது அல்ல. எல்லோரும் பலமுறை படமாகப் பார்த்திருக்கும் காந்தியை ஒரு கலை வடிவமாக உயர்த்தியதற்காக கிடைத்தது' என்று குறிப்பிடுகிறார்.

அண்மையில் ஜகார்த்தாவுக்கு ஓவியக்கண்காட்சி நடுவராக சென்று வந்த ஆதிமூலத்தின் வண்ண ஓவியங்கள் பெரிதும் அருபத்தன்மை கொண்டவை. இந்த ஆண்டு ஏப்ரல் 9—ம் நாள் தொட்டு, பத்து நாள்கள் சென்னை சாக்ஷி ஓவிய அரங்கில் நடைபெற்ற ஓவியக் கண்காட்சியில் இடம் பெற்ற 'நான் துரத்தும் நிலம்' என்ற தலைப்பிலான அவரது தைல வண்ண ஓவியங்கள்—பச்சை, சிவப்பு, மஞ்சள், ஆகிய வண்ணங்களின் களஞ்சியமாக இருப்பவை ஓவியனின் பல்வேறு மனநிலைகளைத் தெரிவிக்குமாறு இருக்கும் இந்த வண்ணங்களுடன் கருப்பு வண்ணத்தை கலந்து அவர் ஓவியம் தீட்டும்போது, அவர் தேடிக் கொண்டு செல்லும் நிலம் ஒரு திடமான நிலமா, அல்லது மெல்ல உருகிக்கொண்டிருக்கும் வண்ணக்கட்டியா என்று கூற முடியாதவாறு அமைகிறது.

ஆதிமூலத்தின் ஓவியக்கலை இசைக்கலையாக அருபத் தன்மை அடைந்து காண்பவர் கண்வழி பாய்ந்து நெஞ்சில் ஒரு இசைவெள்ளமாகப் பாய்கிறது.

மிகவும் வெற்றிகரமாக அமைந்த இந்தக் கண்காட்சி, சென்னையில் நவீன கலை பற்றிய உணர்வு செழித்திருப்பதற்கான ஒரு நல்ல அறிகுறியாகும். — இந்திரன்.

> அரசர்களும், குதிரை வீரர்களும் இருக்கும் இடம் தெரியாமல் போய்விட்ட இன்றைய ஜனநாயக உலகில் ஆதிமூலம், அரசர்களை வெறும் போலிகளாகவும், பொம்மைகளாகவும் படைப்பது . . .

